[illegible]

சு. அதின்பேரில் இதுவன்றயில் பெரியோர்கள் இவ்வித சந்தர்ப்பங்களில் தேவாலயத்திற்குள் போய் ஸ்வாமி தரிசனஞ்செய்துவந்த அனுஷ்டானத்தைக் குறித்துச்சபையில் வந்திருந்த பஞ்ச தீக்ஷிதரவர்கள், சூரியநாராயண தீக்ஷிதரவர்கள், சாமுசாஸ்திரியாரவர்கள் அனுப்பியிருந்த பத்திரிகைகள் வாசிக்கப்பட்டன. இவையன்றி டிஷ விஷயத்தில் ஒத்துக்கொண்டு அபிப்பிராயப் பத்திரிகை கொடுத்தவர்களில் வந்திருந்தவர்களின் பத்திரிகைகளைத் தவிர வாராமலிருந்தவர்களாகிய டிஷ புதுக்கோட்டை தானாதிகாரம் குப்புசாமி சாஸ்திரிகளவர்களுடையவும், தியாகராஜசாஸ்திரிகளவர்களுடையவும், கோபால சாஸ்திரிகளவர்களுடையவும், ராமகிருஷ்ணசாஸ்திரிகளவர்களுடையவும், ஸாமவேதம் கிருஷ்ணசாமி ச்ரௌதிகளவர்களுடையவும், சக்கிரபாணி ஆசாரியாரவர்களுடையவும், ராமானுஜாசாரியார் வகையறாக்களுடையவும், புதுக்கோட்டை அரண்மனை வித்துவான்களாகிய கிருஷ்ணமாசாரியா ரவர்கள் ராமுசாஸ்திரிகள் வகையறாக்களுடையவும், பின்னும் அப்பா ராமானுஜ ஐயங்கார் வகையறாக்களுடையவும், திருவாதி சோமாஸ்கந்தக் குருக்களுடையவும், தஞ்சாவூர் சங்கரசாஸ்திரிகளவர்களுடையவும் பத்திரிகைகளும் வாசிக்கப்பட்டன.

இன்னும்வரும்.

ஓம்.

[illegible]

ப்ரம்மவித்தியா.

மாதம் இருமுறை
பிரசுரஞ்செய்யப்படும்.

புத்தகம்-5. சிதம்பரம்: 1890வரு டிசம்பர் 1௨ | இல-4.

[illegible]

[illegible]

புதியசீர்திருததம்.

ஐயா!

இக்காலத்தில் எங்கும் ஏதோ சிற்சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று சிலர் ஆங்காங்கு பெருமுயற்சி செய்து வருகின்றனர். அவர் கருதுவது யாதெனில், எச்சாதிகளிலும் கைம்பெண்களுக்கு மறுமணம் செய்யவேண்டும் என்பதும், பெண்கள் பருவமடைந்த பிறகே மணம் புரியவேண்டுமென்பதும், அவ்விதம் மணம புரிந்த பெண்டிர்களைக் கூடுவது 12 அல்லது 14 வயதுகளுக்கு மேலேதானே உசிதம் என்பதும், பெண்கள் விவாகமில்லாமலு மிருக்கலாம் என்பதும், அவ்விதம் இருந்தால் அது குற்றமாகாதென்பதுமே. இவ்வித அபிப்பிரா

[illegible]

யங்களைப் பற்றி வெளியிற்றான் வெளியிடுவானேன், நமது பந்துக்களைத்தான் கேட்பானேன், இவர்கள் மனதை வசப்படுத்துவது மிகக்கடினம். இவ[illegible] பெரும்பான்மையில் தம்முன்னோரெழுதிய புத்தகத்தைப் படித்து அதில் பிடிவாதம் பிடிப்பார்களேயன்றி ஆசாரச்சீர்திருத்த விஷயத்தில் பரமாசாரியராய் உச்சிமுதல் உள்ளங்கால்வரையில் வெண்மைபூண்ட மேற்றிசைக் குரவர் கண்டவுண்மைகளை ஒப்பாது திரிவர். ஆதலின் இவரிடம் சொல்வதிற் சிறிதும் பிரயோஜனமில்லை. இவ்விஷயத்தில் நமதரசாங்கத்தாரைக்கொண்டு ஏதேனும் சட்டதிட்டங்கள் செய்து இவர்களைக் கட்டுப்படுத்தினாலன்றி வேறு விஷயத்தில் இவர்களைக் கட்டுப்படுத்துவது மிகக்கடினம் என்று தம்மவருட்டாமே விசாரித்து விடாத முயற்சியுடன் அவ்வேலை முடியும் வழியையாய்ந்துவருகிறார்கள். அவர் முயற்சி நற்பயனை விளைவிப்பதும் நல்லெண்ணத்துடன் செய்யப்படுவதுமானால் இதுவரையிற்றானே பயனபட்டிருக்கும். அங்ஙனமாகாமையாற்றான் ஏதோ நம்முன்னோர் தவவலியால் அவர்கரு

[illegible]

த்து இதுவரையிற் கூடாதிருக்கின்றது. ஐயா! அறிஞர்காள்! இச்சமயத்தே நம் தேயத்தறிஞர் மணிகளுக்குண்மை தெரிவிக்கவுத்தேசித்தே எமதிறகுவெகு ஆடம்பரத்துடன் கடுநடையாய் நடக்கின்றது. ஐயன்மீர்! நமது மதஜாதி வர்ணங்களுக்குப்பல விரோதம் வந்திருக்க இக்காலத்தும் உலகத்தாருக் குபயோகஞ் சிறிதுஞ் செய்யாது வீட்டில் உறங்குவீரேல் முற்றிலும் மோசம்வந்து நுங்குலத்துக்கே பெருமபகீர்த்தி விளையும். ஆயின் சாஸ்திரங்களை ஆராய்ந்தும் உலகரீதியை யறிந்தும் சிடரிடங் கருணைகூர்ந்தும் சாஸ்திரமென்னும் சத்திரம் எடுத்தும் முன்வாருங்கள்! வீணிற் காலங் கழிக்கவேண்டாம்! இதே நற்சமயம்! இச்சமயம் விட்டால் மற்றெச்சமயமுமில்லை! இச்சமயம் விடின் பெருநஷ்டம் வரும்.

இனி உங்கள் மதங்களை உள் வைக்காது வெளியிடுங்கள். அவைகளில் அரசாங்கத்தார் பிரவேசிக்காதவழி தடுக்கவேண்டி உங்களாற்கூடியவரையில் முயலுங்கள்! நமது சுதேசபண்டிதர்கள் கொள்கைகளை வெளியிடவென்றேகங் கணம்பூண்டு நமது ப்ரம்மவித்தை

[illegible]

வெளியிலுலாவிவருகிறுள். ஆதலின் இது சமயம் நம்மவர் கொள்கைகளுக்கு நேர்ந்த ஒரு கெடுதியை நன்காராய்ந்து குகைகளினின்று சிங்கங்கள் வெளிப்படுவது போல் வெளிப்பட்டுப் புறவாதியானைகளை வெருட்டுங்கள். உங்களுக்கு நாம் சொல்லவேண்டிய கதை ஒன்றுண்டு. அதாவது இவ்விந்தியா தேசத்தில் பம்பாய்மாநகரில் மலபாரீ எனப்படும் ஒரு சீமான் இருக்கிறுன். அக்கனவான் எக்காரணத்தாலோ நம்மதத்தில் சில சீர்திருத்தக்காரர்கள் சொல்லும் விஷயங்களை இத்தேசத்து ஆங்கிலேய பண்டிதரிடம் சிறிதூன்றினன். அக்கனவானே இக்காலச் சீர்திருத்தச் சங்கத்தாரின் தலையாயுள்ளவன். அக்கனவான் காட்டிய வழியைப் பற்றினவரே திவான் பகதூர் ரகுநாதராவ்முதலிய சிலரும். அக்கனவான் வெகு காலமாய் இடைகண்டுபிடிக்கக் கருதி வங்காளத்தில் ஏதோ ஒருவன் படுமுரட்டுத்தனமாய்ச் செய்த புணர்ச்சியால் ஒரு சிறுபெண் அலியாயமாய் மாண்டுபோக அச்சமயத்திற்றுனே வெளிவந்து இனிப்பெண்கள்புருஷருடன்கூட வேண்டிய வயது 12 அல்லது 14

[illegible]

க்குக் குறையக்கூடாது என்று ஓர் விதியை அரசாங்கத்தாரைக் கொண்டு ஏற்படுத்த முயன்றூர். அவர் கருத்து அவ்விதம் ஏற்படுங் காலவளவைக்கடந்து புணர்ச்சி செய்யின் அப்புருஷனை அரசாங்கத்தார் தண்டனைக்குள்ளாக்கவேண்டும் என்பதே. பிறகு இக்கனவான் இவ்வித உத்தேசத்தை நிறைவேற்ற வேண்டி அவ்வேலையை இச்சீமையில் செய்தால் இங்கு பல வைதிகரான ஆரியர் இருந்தாற் பயன்படாதென்று கருதி உடனே இத்தேசம் விட்டகன்று கருங்கடல் கடந்து ஆங்கிலேய நாட்டையடைந்து அங்குள்ள நம்மையாளும் நாட்டவர்க்கும் நமது பெண்கள் வெகு துயரமடைவதாய்ப் போதித்து அதை நீக்கி அவர்களை ஆளவேண்டிய சில ஏற்பாடுகளை அவ்வாங்கிலேயரைக் கொண்டே முயன்றுன். இக்கருத்துடன் வெளிவந்த அப்பாசிகனவான் அபிப்பிராயத்தை நமது தேசத்தவரில் சில ஆங்கிலேயபாஷா பண்டிதர்கள் பின் பற்றினூர்கள். இதுவரையிலவர்முயன்றும் அங்கேதேனும் பயன்படாதொழிந்தது. பிறகு அக்கனவான் அவ்விடம் விட்டு இவ்விடம் வந்து

[illegible]

இவ்விடத்திலுள்ள சிலரைக்கொண்டு ஏதோ வேண்டிய விஷயங்களைத் தீர்மானிக்கவேண்டி பலவிதமுயற்சி செய்துவருகிறார். இங்ஙனமிருக்க இத்தேசத்துப் பண்டிதருள் எவரும் அவ்விதமுயற்சியைத் தடுத்து அனாதியான ஆரிய சாரத்தைப் பாதுகாக்கமுயல்கின்றாரில்லை. ஐயோ பாவம்! இக்கனவான் உள்ளபடி சீர்திருத்தஞ்செய்யவேண்டி வெளிவருபவரேல் அவர் தாம் முதலில் தம் ஜனங்களைத் திருத்தவேண்டுமே. இக்கனவானினத்தாருள் ஒருவயச் சிறுபிள்ளைக்கும் அதற்குங் குறைந்தவயதுள்ள பெண்ணுக்கும் திருமணம் நடப்பிக்கும் வழக்கமிருக்கின்றதே. ஆகலின் எவ்விதத்திலும் ஆரியர் கொண்ட ஆசாரங்களைக் களைந்து ஆங்கிலேயர் கொண்ட நடைகளை இவர்க்குப் புகட்டிவிடவேண்டியே அவர் முயற்சியென்றுபுலப்படுகின்றது. இவ்விதங்கூறுவதற்கு மற்றும்பலகாரணங்களுண்டு. உலகத்தில் ஒருபெரிய தேசத்தில் ஒருவன் அறிவினனாய் ஒரு குற்றஞ் செய்யின் அதைமட்டில் ஆதாரமாய்க் கொண்டு அத்தேசத்தவர்க்கு ஓர் நிர்ப்பந்தமான சட்டத்தைச் செய்தல் அரசாங்கத்தவர்க்குசிதமாமோ? பாரு

[illegible]

ங்கள்! விசேஷமாய்க் கைம்பெண்களுக்கு மறுமணஞ்செய்யும் வழக்கம் நடைபெற்றுவரும் இராஜ்ஜியங்களில் வேறொரு புருஷனை மணம்புரியவேண்டி முன்புருஷனையொழிக்கும் வழியும் அனுஷ்டிக்கப்பட்டுவர அதைப்பற்றி ஏதேனுமாலோசித்து அத்தேசத்தவர் அவ்விடம் நடக்கும் மறுமண வழக்கத்தை ஒழிக்கின்றனரா? பாருங்கள்! சில வருஷங்களுக்கு முன் "மேப்ரிக்" என்பவள் இங்கிலாந்தில் வேறு புருஷனை மணக்கவுத்தேசித்து முன்னுபகனுக்குப் பரலோகவழி காட்டினாள். அந்நங்கைக்குக் கொலைத்தண்டனை சம்பவம் நேர்ந்துழி அத்தேசத்தவர் பலர் ஒருங்குகூடி இங்கிலாந்தில் நமது காருண்ணிய சக்கிரவர்த்தினியார் இராஜ்ஜியத்திற்றோன்றிய குற்றங்களில் இவ்வகையி லிதுமுதலாதலின் அவ்விதஞ் செய்யாது மன்னிக்கவேண்டிய பெருமுயற்சிசெய்தனரேயன்றி மறுமண வழக்கைத் தடுக்கவாதல், அதற்கெனச்சட்டதிட்டங்களைப் புதுப்பிக்கவாதல் முயன்றிலர். அவ்வரசாங்கத்தாரும் அவ்விஷயத்திற்கியைந்திலர். அங்குள்ள ஜனங்கள் மூன்றே கோடி. அவர் வழக்கத்துக்கு அந்நங்கை பிரதிநிதியாகாதோ

[illegible]

ழிய, நமது தலைநிவி, இருபத்தைந்துகோடி ஜனங்கள்வசிக்கும் இவ்விந்தியா தேசத்திற்குமுற்குற்த்த முரடன் பிரதிநிதி யாயினுன். (ஐயோ! நம் தேசத்திற்குநன்மை செய்ய வந்த நாஷனல் காங்கிரஸ்ஸுக்கு வந்த கனவான்கள் இந்தியாவுக்குப் பிரதிநிதியாகவில்லை. இவ்விஷயத்தில் ஒருவன் பிரதிநிதியானது மிக வியப்பே.) மேலும் இங்கு மாண்டது ஒரு சிறுபெண். அங்கு மாண்டது ஒரு பெரியமனிதன். இங்கு கொன்றது அறிவினத்தாலும் கரைகடந்த காதலாலும் முரட்டுத்தனத்தாலும். அங்கு கொன்றது அன்னிய புருஷவாஞ்சையாலும், கொலைசெய்யவேண்டும் என்னும் இச்சையாலும இவ்விதநடவடிக்கை அத்தேசத்தில் ஒருசட்டத்தையும் திருத்தவில்லை. நம்தேயத்தில் மட்டும் திருத்துமெனில் இது எவர்க்குவியப்பைவிளைவிக்காது. இனி அவ்விடத்திய விஷயத்தில் சம்பந்தப்பட்டவன் கனம், தனம், கல்விமுதலியன பெற்றவன். இத்தேச விஷயத்தில் சம்பந்தப்பட்டவன் அவைகளற்றவன். இவனைக்கொண்டு இவ்வாரிய மகாதேசத்துள்ள எவர் புத்திமையையும் வழக்கத்தையும் ஊகிப்பது உசிதமாகுமோ! இவ்விதம் ஆஸ்திரேலியா தேசத்தில் மறுமணத்துக்கென முன் மணவாளனை ஒழிப்பது வெகுசாதாரணமாய் அடிக்கடி நியாயஸ்தலத்து

[illegible]

க்குப்பெருந்துகையில் விசாரணைக்கு வருகிறது. அங்ஙனமிருக்க அத்தேசத்துக் கவரன்மெண்டார் "மறுமணம் செய்யலாகா"தென்ருவது "புருஷன் உயிருடன்இருந்தாலும் மறுமணம்செய்யலா"மென்ருவது "ஒரு புதிய சட்டம் செய்யவில்லையே. இனி அவ்வத்தேசங்களில் ஒற்றுமைப் பெருக்கத்தால் அரசாங்கத்தைப்பற்றியவிஷயம் தவிர மற்ற ஆசாரம் முதலிய விஷயங்களில் அவ்வத்தேசத்தவரே வேண்டியவிஷயத்தைச்செய்துகொள்கிறர்களாதலின், அவ்விஷயங்களில் அரசாங்கத்தார் பிரவேசிக்மாட்டார்கள். இனி, இக்கலியுக புருஷர் உத்தேசம்பலித்தால் இலையிலிட்டசோற்றை வாயிற் போட்டுக்கொள்வது ஒன்றுதவிர மற்றெல்லாம் அரசாங்க உத்தரவின்பேரிற்றுன் நடக்கவேண்டிவருமாதலின், நாம் மிருகத்தினும் உயர்வடையாமல் கேவலமான ஹீனஸ்திதியைப்பெற்றிடுவோம். நம்மவர்களுள் பக்குவம் பெற்றபெண்கள் புருஷனுடன்கூடாதிருந்தால் அது நமது சாஸ்திரங்களில் பலகூற்றிற்கும் விரோதம். இனி ஏதேனும் நமது ஜாதிக்குள் ஒரு கட்டு செய்துகொண்டாலும் செய்யலாமேயன்றி இவ்விஷயத்தை அரசாங்கக் கட்டாகவாக்கல் மிகக்கொடியது! கொடியது!! பாருங்கள்! கிரமமாய்ப் பக்குவம்பெற்ற பதினெருவயதுள்ள ஒரு பெண்ணைக் கணவன் மண

[illegible]

க்க அவனுக்கு விரோதி ஒருவன் "பருவமடையாப் பெண்ணை மணந்தான்" என நியாயத்தால் வாதிக்க நியாயாதிபதி அப்பெண்ணின் பருவத்தையறியவேண்டி வைத்தியனைக்கொண்டு சோதிக்க நேரிடும். ஐயையோ! புருஷனென வெட்கமற்று வெள்ளுடை பூண்டு யாம்உயிருடனிருக்க, நம்மையே கதியென்ப்பெற்ற பேதையரை மற்றவர் மடமற மாசறப்பரீக்ஷிப்பதென்றால் இதற்கும் மேலான நிந்தியர்க்கு வேண்டிய வெகுமானம் யாதுளது? தன்னை யண்டின பெண்களுக்கு மானங்காக்காத நமது பிழைப்பேதுக்கு? உடையற்ற மற்றவன் பெண்களைப் பார்த்தலிலும் வேறு பாவந்தானுண்டோ? இவ்விதச் சோதனையிலும் பெண்களுக்கு மரணத்தண்டனை குரூரமுள்ளதோ? இவ்விதமான பெண்ணிடம் மறுத்துப் பெண்களுக்குப் புருஷனிடம் அச்சமில்லாக்களிப்புண்டாமோ? புருடர்க்கும் இவரிடம் மனம்பிடிக்குமோ? மறுத்து அவர் கற்பெங்கே? ஐயோ! இவ்வளவு மானக்கேடும் இத்தேசத்தவராலே நமக்கு விளையக்காலம் வந்ததே! தாய்மானங்காக்காத் தனயரானோமோ! அந்தோ! இச்சங்கடக்

[illegible]

காலத்தும் பண்டிதர் படுத்துறங்குவரோ! இவர் உறக்கம் இத்தேசத்தைப் பாழாக்கியதே! இனி உண்பதற்கும் உறங்குவதற்கும் ஒண்டொடிகளைக் கூடுவதற்குமா அரசாங்கவுத்திரவு பெறவேண்டுமே! அங்ஙனமாயின் குரங்காட்டி கையிற்சிக்கின குரங்குக்கொப்பாகாதொழிவோமோ? இனி அரசாங்கத்தார் ஏதேனுஞ்செய்தால் ஏது செய்வோமெனலாம். அவரோதுஞ் செய்யவில்லை. மற்று நந்தேயத்துக் குழந்தைகளே இவ்விதஞ்செப்ப முயல்வது. அங்ஙனமன்றி நமது குலாசாரியர் வாதராயணமுனிவர் கூறிய "அரக்கர், கலிக்கொண்மைபால் அந்தணர்குலத்துதித்து அவரைப் பீடிப்பர்" என்ற திருவாக்குச் சத்தியமாமா? இனி எமது அபிப்பிராயம் இவ்விஷயத்தில் வேற்றுமைப்பட்டிருப்பதை எமதரசாங்கத்தார் அறியாதொழியின் வெகு நஷ்டம் நேரிடும். ஆகலின் பண்டிதர்கள்! இனித் தூங்காதீர்கள்! வெளிவாருங்கள்! இப்புதிய சீர்திருத்தக் குற்றங்களை வெளியிடுங்கள்! உங்கள் உள்ளத்தை அரசாங்கத்தார் அறியச்செய்யுங்கள்! கிர்ப்பமாய் ப்ரம்மவித்தை முதலிய பத்திரிகைகளில் அபிப்

[illegible]

கு. ஸ்ரீ.

பிராயங்களை வெளியிடுங்கள்! பெருங்கூட்டங்களிலும் உற்சவங்களிலும் கூடி வெகுவாய் நம்மவர்க்குப் புகட்டுங்கள்! இங்ஙனமாயின் நமது வருணதர்மங்கள் குறைவுருது. ஆதலின் நடுக்காலத்து முன்னோர் உறங்கியவாறிராது வெளிவாருங்கள்! உபந்நியாசக வழியைக் கைக்கொள்ளுங்கள்! மற்றவர் நாட்டத்தை ஓட்டுங்கள்! உண்மையை நாட்டுங்கள்! இதுவே நற்சமயம். இவ்விடயததில் உங்கள் மனம் உள்ளபடி உழன்றுவர முழுமுதற்கடவுளாயமுக்கட்பிரான் திருவருளை எதிர்பார்க்கிறோம். இனி நீவிர் வெளிவந்தளிக்கும் விடையை எதிர்பார்க்கும்

அறிஞர்க்கடியோன்.

குறிப்பு.—இவ்விடயம் இங்கு எழுதியது சுதேச பண்டிதர்க்கு இக்காலவர்த்தமானம் தெரியவேண்டும் என்கிற கருத்தாலன்றி வேறல்ல.

கு. ஸ்ரீ.

சம்போக வயது நிர்ணயம்.

ஐயா!

நந்தேயத்திற் சிலகாலமாய்ச் சிலர் கூடிக் கைம்பெண்களுக்கு

𑌸𑌂𑌭𑍋𑌗𑌵𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌃

𑌸𑍂𑌚𑌨𑌾

[illegible]

மறுமணஞ்செய்யவேண்டுமென்று வாதித்துக்கொண்டு பிறகு பருவம் வந்த பெண்களுக்கே விவாகஞ்செய்யவேண்டுமென்றும், அவ்விதம் புருடசமபந்தம் பெற்றாலன்றி அவர் விவாகம முற்றுப்பெறாதென்றும் பலவிதம வாதித்தும வருகிறார்கள். அவர் முயற்சி சிலவிடம் பயன்பட்டதும் சிலவிடம பயன்படாதொழிந்ததுமாய் இருக்கின்றது. அவர்களுட்சிலர் எல்லை கடந்த எல்லாக் கைமபெண்களுக்கும் மறுமணம் செய்ய விழையக் தாரில்லை. மற்று மணவாளனுடன் கூடாது அவனை இழந்தவர்க்கே விவாகஞ்செய்யலாம் என்பர். மற்றுஞ்சிலர் இவ்வித வரை வேண்டுவதில்லை என்றும், ஆங்கிலேயர் கொண்டபடி ஆசையுள்ளவரையும் மறுமணஞ்செய்யலாம் என்கிறார். இவர்களுட்சிலர் சொன்மாத்திரையில் நிற்பவர். சிலர் செய்தும் வருகிறார். இங்ஙனமிருக்க எவ்விதத்தாலும் தற்காலம் நடக்கும் பாலிய விவாகத்தைத் தடுத்துப் பிள்ளையான பெண்களுக்கே விவாகம் நடத்தும்படி ஏதேனும் ஒருவகைநிர்ப்பந்தம் நம்மவர்க்குச் செய்தால் அதுபற்றி இத்தேசத்தில் கன்னியாவஸ்தையில் தானஞ்செய்வதொழிந்து பாலியவிவாகமழிந்துவிடுமென்றெண்ணி அவ்வபிப்பிராயத்தை நேரிற் காட்டாது "ஏதோ கன்னிமாரிடங் கருணை

[illegible]

பெருகி அவர்க்குப் பாலியத்திற் புருடருடன் கூடுவதால் உண்டாகும் துன்பம் ஏதோ உண்டென்றும் அதைத் தாம் நிவர்த்திக்கவேண்டும் என்றும்'' வெளிவந் மங்கைகள் மணவாளனுடன் கூடு வேண்டிய காலத்தை வரைந்திட முயல்கின்றார்கள். அவர் கூறுவது "இத்தேசத்திற் பெரும்பான்மையிற் பெண்கள் பன்னிரண்டு வயதுக்கு முன் பருவமடைவதில்லை. அவ்விதமடையினும் அவர் புருடசம்பந்தத்தால் தனதருமையான வாயுளை இழக்கின்றார்கள். அல்லது அவர் பெற்றெடுக்கும் குழந்தைகளும் மிகப்பலவீனங்களாயிருக்கின்றன. ஆதலின் இவர்களுக்கு கோவலாய் ஒருசமயம் புருஷசம்பந்தத்திற்குக்காலம் ஏற்படுத்திவிடவேண்டும். சிலர் பதினான்குவயதான பிறகே புருஷசம்பந்தம் வைத்துக்கொள்ளவேண்டியதாய்த் தர்மசாஸ்திரங்களிருப்பதாயும், மற்றுஞ்சிலர் பதினாறுவயதான பிறகே பெண்கள் புருஷனை அடையலாம் என்று தர்மசாஸ்திரத்துள்ளதென்றும் சொல்லுகிறார்'' என்பதுமே. இவ்வாதிகளிடம் எமது வாதம் பயன்படாது. யாதுபற்றியெனின், இவர்

[illegible]

தம்முட்டாமே மேதாவிகளென நிச்சயித்துப் பிறர் சொல்லைக்கேட்காது. தம்மினத்தில் வைதிகரைச் சேர்க்காது ஏதோ தமது புத்திக்கெட்டினவரையில் வேலை செய்துகொண்டு அரசாங்கத்தாரிடம் தாம் எல்லோருக்கும் பிரதிநிதியாய்ச் சென்று இவ்வபிப்பிராயம் அனைவரும் சேர்ந்து எடுத்துரைத்ததாகப் பாவித்து அதுகொண்டு வேலைமுடிக்க எண்ணுகிறார்கள். இவர் முயற்சி பயக்குமேல் இவர்க்கும் நமக்கும் பயன் ஒன்றுபோலமையும். எவ்விஷயமும் ராஜநிர்ப்பந்தமாய் வந்தால் அவ்விஷயத்தில் அவ்விராஜ்ஜியத்துள்ள எவரும் அதன் பயனைப் பெறவேண்டி வருமாதலின் யாமும் அவ்விஷயத்தில் அபிப்பிராயஞ்சொல்ல வேண்டிய வதிகாரம் பெற்றவரோயாதலின், இவர் போய்ப் பிரதிநிதியாய் எமதபிப்பிராயத்தை இராஜாக்களிடம் விளக்குங்கால் அஃதங்ஙனமன்றென யாமும் விளக்கவேண்டியதின்றியமையாது. நிற்க. இத்தேசத்தில் பெரும்பான்மையிற் பத்துவயதுக்குக்கீழ்ப் பெண்கள் பருவமடைவதில்லை. முற்றிலுமில்லையென்றுஞ்சொல்லலாம். அதன்மேற் பன்னிரண்டு வயதுக்குள் அனேகமா

[illegible]

ய்ப் பருவமடைவதுவழக்கம். சில பெண்கள் பதினான்கு பதினாறுவயதுவரையிலும் பருவமடையாதிருக்கின்றார்கள். இத்தேசப்பருவக்காலம் பத்துவயதுமுதல் பதினாறுவயது வரையிலுண்டு. இவ்விதப்பெண்களுள் எல்லோரும் புருஷசமபந்தம் பெற்று மலடாகாது பல குழந்தைகளைப்பெறக் காண்கிறோம். இவர்கள் குழந்தைகளுள் வேற்றுமையொன்றுமகப்படுவதில்லை. இங்கு வைத்தியசாஸ்திரமல்லப் பிரமாணம். நாம் நேரிற் பலரைக்கண்டதே. எவ்வைத்தியனும் ஒருவரைக் கண்டு இவர் பாலியப்பெண்ணின் குழந்தையென்றாவது முதிர்ந்தவள் குழந்தையென்றாவது சொல்லமாட்டான். அதற்குத்தகுந்த சோதனம் சரீரத்தில் அமைந்திலது. ஆகலின் எவ்விதத்திலும் நமக்கு ஒரு நிர்ப்பந்தஞ் செய்விக்க இது ஒரு போக்கு. ஐய! பெண்களிடம் புருஷன் சேர்வது அவர்களைக் கொலை செய்யவல்ல. மற்று மறுதேசங்களில் காதலால். இத்தேசத்தோ காதல் மட்டிலல்ல. அவர்களைக்கொண்டே சர்வ தர்மங்களும் நடக்கவேண்டியிருத்தலால் அத்தர்மானுஷ்டானத்தாலுமே. இனிப் புருஷராற் காண்பதே

[illegible]

க்கு வருத்தமும் வதமும் நேரிடுகிறதாய்ச் சொல்வது மிக வியக்கத்தக்கதே. நிற்க. இத்தேசத்திற் பெண்கள் பருவமடையாதவரையில் அவர்களைக் கூடும் வழக்கமில்லை. இனிப் பன்னிரண்டு அல்லது பதினான்கு வயதுக்கு ஒரு எல்லையிட்டால் அவ்வயதுக்குட் பருவமடைந்த பெண்கள் கணவனிருந்தும் அவனையடையாது காதல் மிகப்பெறுவார் என்பது வெளிப்படை. உலகத்திற் புருஷனிருந்தும் அவனைப் பிரிந்திருத்தல் ஒருவிதமாய்த் துன்பத்தையும் அவனில்லாவிடம் ஒருவிதத் துன்பத்தையுந் தரும். சோறும் பசியுமிருக்கப் புசியாமலிருத்தலுக்கும், சோறில்லாது புசியாமலிருத்தலும் போல். ஆதலின் அது அவ்வளவுசிதமல்ல. இனி அவ்வளவு வயதிற் பருவமடையாதவளிடம் ஒருவன் பிரவேசித்தல் இவர்க்குக் குற்றமாகாதாயினும் அது பெருங்குற்றமும் "பனுக்சரணம" என்னும் கொடிய நோய்க்கிடமுமாகும். ஆகலின் எவ்விதக் காலவளவும் இங்குசிதமல்ல. இனி அவர் பருவத்தின் பரமாவஸ்தையான பதினாறும் வயதே புருஷசம்போககாலமாய் ஏற்படுத்தக் கூடாதோ? வெ

[illegible]

னில், பெரும்பான்மையிற் பன்னிரண்டு வயதிற்கிடையிற் பருவமடையும் பெண்களுக்குக் காதலும் இல்லறமும் மற்று மந்திரசமஸ்காரமும ஒழிய நேரிடுமே. நமது தர்மசாஸ்திரங்களும் அவ்விஷயத்தில் முரணுமே. இனி விவாகமே பருவமடைந்த பெண்களுக்கென ஒப்பலாகாதோவெனில், அவ்விஷயத்தில் நமது சாஸ்திரங்களும் பலயுக்திகளும விரோதிக்கின்றன. அவ்விஷயத்தைப்பற்றிப்பாலியவிவாகபரவைபவத்தைப்பற்றி எழுதிவருமிடமெழுதுவோம். ஆயின் இவ்வழி எவ்விதத்திலும்பட்டங்கைகளுக்கே மணக்கோலங்காட்டவும்பருவமடைந்து சிறிதுகாலம் கணவனிருந்தும் அவனிடம காதல்மாத்திரையிற் காலங்கழித்து ஒருசமயம் அவனிறக்க மறுமணத்துக்கிடமுண்டாம்என்னுமபிப்பிராயத்தாலுமே. ஆதலின் விதவாவிவாகவாதிகளின் வாதத்தில் இடமொன்று. நிற்க. இனி ருதுவாகாத பெண்ணிடமாவது புருஷனுகாவண்ணம் செய்யவேண்டுமல்லவா எனில், அது ஏற்பட்டே வருகிறது. அவ்விஷயத்தில் முயலவேண்டியது யாதுமில்லை. இனி இத்தேசத்திற் பெண்களைப் பொய்ப்

[illegible]

பருவம் கற்பித்துப் புருடருடன் சேர்க்கும் வழியை ஒழிக்கவேண்டுமெனில் அதுவும் அவசியமில்லை. எங்ஙனமெனில், இவ்விதம் எங்கும் நடப்பில்லை. மற்று எங்கேனும் வயது பன்னிரண்டாயும் தேகசுவபாவத்தாற் பருவந் தெரியவில்லை. அங்கே இவ்வேலை நடக்கிறது. அவ்விஷயத்திற் குற்றமதிகம் நேருவதுமில்லை. அங்கு ஆதிகாலத்து ருதுவிற் காலதோஷங்களுக்காகச்செய்யும் சடங்கு சரியவில்லைபெறுதுபற்றி அது அவ்வளவு உசிதமல்லவென்றே நம்மவருட் பெரியோர் தள்ளியிருக்கிறார்கள் இனி நமது தர்மசாஸ்திரத்திற்கு விரோதமான சில சங்கதி சிலவிடம் நடக்குமேல் அதை யாமே விலக்கவேண்டுமேயன்றி அவ்விடயத்தில் அரசாங்கத்தார்க் கிடங் கொடுக்கக்கூடாது. நாம் கூடிச் செய்யும் வியவஸ்தையில் மற்றவர் சேரமாட்டேன் என்கிறார்களே அதற்காக நாம் இவ்விதஞ் செய்வோமெனில், அதற்காக அவர் பேரும் வேறுவழி பார்க்கவேண்டுமேயன்றி இவ்வழி எக்காலமும் முசிதமாகாது. இப்பொழுதுள்ள ஏற்பாட்டில் அவர் துன்பங் காணபாரேல் தாமே விடுவார். இனி

[illegible]

இக்காலத்துதித்த ஆங்கிலேயர்பாடையை முற்றிலும் கற்று நம்முன்னோர் கருத்தைச் சிறிதுமறியாதவர்க்கு இது குற்றமெனத் தோன்றின் அதை மாற்றவேண்டுமோ? இனி யாம் அதந்தவரையிற் றெனாட்டிற் புத்திமான்களாய்ப் புதிய சீர்திருத்த விஷயத்தில் முன்வரும் ஒவ்வொருவரும் உட்கார்ந்து சிந்தித்து ஆலோசிப்பாரேல் அவரவரும் பன்னிரண்டு வயதுக்குமுன் கன்கணவனை யடைந்த கன்னிகளின் கர்ப்பத்தில் உதித்தவராகவே பெரும்பான்மையிற் காணப்படுவார். இவ்விதம் அக்கன்னிகைகளின் குழந்தை பெற்ற புத்தி நமக்குத் தெரியவருகிறபடியால் இதற்கென ஓர் நியமம் புதியதாகவேண்டுவதில்லை. இனித் தேகவலி குறைவதால் ராஜாங்கரை இதற்கு வேண்டுமெனில், ஐயோ! சிலர் கொண்டபடி எல்லோருக்கும் இனி மாமிசபக்ஷணமும் அரசாங்க நிர்ப்பந்தத்தில் சேரவேண்டும் போலும். இத்தேசத்தில் பெருங்குடியாலும், சூதாட்டத்தாலும், பல்லுயிர்கள் மாண்டுவர அவர்களை ஒருசட்டத்தாலும் தடுக்கமுயல்வதில்லை. அங்ஙனம் மற்றவர் பெண்களிடம் மணப்பவரை அப்பெண்ணின் பண

[illegible]

வாளன் குற்றங் கூறுவிடம் விசாரிப்பதில்லை. தண்டிப்பதில்லை. இனி தம்பெண்சாதியிடம்போகும் மனிதனுக்கே தண்டனை எனில் எவ்வளவு அழகு. நமதரசாங்கங் குற்றமுள்ளனவேனும் அங்ஙனமில்லாதனவேனும் எவ்வழியும் உலகத்தை நடுநிலையிற் பாலனஞ் செய்தவராய நமது அரசாங்கத்தார் பிரவேசிக்கவே கூடாது. சிலர் ஏதோ சில விடயங்களைத் தெரியப்படுத்திக் கொள்வாராயினும் அவரபிப்பிராயம் எல்லா ஜனங்களுடைய அபிப்பிராயமென்றும் அரசாங்கத்தார் ஊகிக்கக்கூடாது. ஏதோ பெரியோர் கூடி ஏதோ சம்பாதித்தாரென எண்ணவேண்டாம். இதுவரையில் முடிந்தது முண்டைகளின் முடிவே. இப்புதிய பரிஷ்காரத்தில் நாவிதர் காட்டுபகாரம் செய்தது. பம்பாயில் கைம்பெண்கள் தலைமயிர் கஜாஞலே. ஆதலின் இதில் உண்டாகும் கெடுதியைப்பற்றி நன்றாய் ஆலோசிக்கவேண்டும். இவ்விதி அரசாங்கத்தாரால் ஏற்படுமேல் அதைமீறி நடப்பவர் ராஜதண்டனைக்குட்படுவார். அவ்விதக்குற்றங்கள் நடக்காது காக்கவேண்டியது போலீசாரிடம் வரும். அவ

[illegible]

ரோ சத்திபரூபிகள். அவர்க்கிவ் விஷபத்தில் அதிகாரம் கிடைத்தால் தினந்தோறும் இவ்வித சமபவங்கள் பல நியாயஸ்தலம் என நேரிடும். பல சிறுபெண்கள் அந்நியாயஸ்தலத்தில் வரவும் அவரை நாணக்குறைவான கேழ்வி கேட்கவும் நேரிடும். அவர்க்கு வைத்திய சோதனையும் சம்பவிக்கும். முன் பாடலீபுரத்தில் ஒரு பெண் பருவத்தை அறியவேண்டிய ஒரு வைத்தியனைக்கொண்டு சோதிக்கப்பெற்ற பெண்ணை அவள் கணவன் விட்டொழித்த சங்கதி மறந்தீர்களா? இனி அக்கதி நந்தேயத்துப் பெண்களுக்குச் சாதாரணமாகும். பிறகு காலஞ் செல்ல வைத்தியர் யோக்கியதைப் பத்திரமும்நிஷேதத்துக்கு வேண்டிவரும். பிறகு கற்பும், நாணமும் நங்கை கட்கழியும். இனி இவ்விதம் பெண்கள்மானத்தைக் கெடுக்வா பெண்கள் நம்மைப் பெற்றெடுத்தார்கள். ஐய, வெகுவிஷயும் ஆலோசித்து முடிக்கவேண்டியஇவ்விஷயத்தில் அவசரப்படலாகாது. ஆதலின் ஆங்காங்கு பெருங்கூட்டங் கூடி எவ்விதத்திலும் ராஜாங்கத்தார் இவ்விஷயத்தில் பிரவேசியாதபடி தக்கமகஜர்

[illegible] ஶிவம்.

[illegible]

ஆர்யா:!

[illegible]

கள் அனுப்பவேண்டும். அரசாங்கத்தார்க்கோ எமக்கேதோ ஹிம்ஸை செய்யவேண்டும் என்கிற அபிப்பிராயமில்லை. இங்கெழுதியது எமதபிப்பிராய மட்டுமல்ல. மற்று இத்தேசத்துள்ள பல கனவான்களுக்கும், கல்விமான்களுக்குமுள்ளதே சுபம். சுபம்.

பண்டிதர்களுக் கறிவுறுத்தல்.

ஐயா! பத்திரிகா நண்பர்காள்! ஈண்டு ஒன்றுவிசாரிக் கற்பாலது. இக்காலத்தில் கலியின்கொடுமையால் அநேகமாய் சதாசாரங்கள் ஒழிந்தன. துர்மதங்களும் துர்ச்சாரங்களும் மலிந்தன. நமது பொருளும் ராஜாங்கத்திலுள்ள பல வரிகளால் குறைவுற்றன. நமது சுதேச பண்டிதர்களும் நீங்காமையலுற்றனர். ஐய! எவ்விதத்தாலாவது பொருட்டேடுவோம். வயிற்றை நிறப்புவோம். குடும்பத்தை இரக்ஷிப்போம். கஷ்டத்துடன் காலங்கழிப்போம். ஆயினும் எமக்கு கல்வழி ஒன்றுமறு

[illegible]

...ணம்பிலுண்டே என்று எண்ணிய எண்ணமும் ஒழிய வழி நேர்ந்ததே! என் செய்வோம்! யாது பற்றியெனின், முதறிஞர் முதுமொழிகளை முற்றிலும் கசடறக் கற்ற பண்டிதமணிகள் நமக்கேதுமுபகரிப்பதில்லையே. நம்மவர்க்கு எக்காலமும் குன்றாவலியும் அழியாப்பொருளும் கல்வியே. அதைக்கொண்டே நமதுமுன்னோர் இத்தேசத்திலிருந்து தர்மதங்களையும் ஆசாரங்களையும் சிறிதும் மிகுதியின்றி ஓட்டினார்கள். ஏதேனும் புதிய ஒருஆசாரம் வேண்டுமென்று முயன்றாரில்லை.

என்னையெனில், ஆரியர் அனுதியிற் கொண்ட எந்தவாசாரமும் அனுதியிற்கொண்ட எந்த வாசாரமும் மதத்துட் சம்பந்தம் பெற்றதும் பிரத்தியக்ஷத்திற் சோதிப்பவனுக்கு ஒரு பயனைத்தருவதுமே அமைந்திருக்கிறது. அவ்விஷயம் இனிக்கிரமமாய் எழுதப்படும் ஆரியாசார ரகசியத்திற் காணலாம்.

Chilambaram. Printed and Published for the Proprietor at the Brahmavidya Press, No. 76. Seu-kalooneer Pilliar koil Street.

ஓம்.

[illegible]

ப்ரம்மவித்தியா.

மாதம் இருமுறை
பிரசுரஞ்செய்யப்படும்.

புத்தகம்-5. சிதம்பரம்: ,1890 ஹூ டிசம்பர் மீ 15உ | இல-5.

[illegible]

பண்டிதர்களுக் கறிவுறுத்தல்.

(96-ம் பக்கத்தொடர்பு)

ஆகலின் நமது மதம் வருணம் ஆசாரம் இவற்றின் சம்பந்தத்தை யறிந்த பண்டிதர்களே வெளிவாராயின் நமக்கதிலும் வேறான குறைவுண்டோ? அறிஞர்காள்! சிறிது செவிகொடுங்கள்! முன் மாந்தாதாமுதல் நந்தனீறாகவுள்ள வரசர் இப்பூமண்டலத்தை யாண்டுவந்தகாலத்தில் அந்தணர்க்குள் அறிஞர்க்கு அதிக கௌரவமும் மற்று அவரிடம் அன்பும் பெருகிவந்தது. அவர் சொல்வது தருமமாய் நடந்தது. அவர்க்குக் கல்வி பொழுக்கங்களும் நன்மையடைந்திருந்தன. இக்காலத்தோ